**CC**.**NO**.251/2022

**எதிரி ஆஜர்.**

**அ.சா.5, ரவிந்திரன் த/பெ.சகாதேவன், எம்.பி.எண். 2/2023, தேதி 26.12.2023 மனு உத்தரவின் பேரில் மீண்டும் அழைக்கப்பட்டு எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்.**

நான் இரண்டு வருடம் 11 மாதங்களாக சென்னை இன்போசிஸ் நிறுவனத்தில் பணியாற்றி வருகிறேன். இறந்துபோன நபர் எனது உறவினரா என்றால் இல்லை. இறந்துபோன நபரும் நானும் ஒரே தெருவை சேர்ந்தவர்கள் என்றால் சரிதான். ஏஞ்சல் டீக்கடை வடக்கு திசையை நோக்கி இருக்கிறது என்றால் சரிதான். எனக்கு சம்பவ தேதி சரியாக ஞாபகமில்லை. நான் சம்பவ தேதியன்று வாங்கப்பாளையத்தில் டீக்கடை வைத்திருந்தேன். நான் ஏஞ்சல் டீக்கடையில் எந்த இடத்தில் இருந்தேன் என்றால் டீக்கடை முன்பு நின்றுகொண்டிருந்தேன். நான் நின்றுகொண்டிருந்த இடத்திற்கு முன்பு இருந்த சாலை கரூர் - கோயம்புத்தூர் பிரதாண சாலை என்றால் சரிதான். அந்த சாலையில் குறுக்கே செண்டர்மீடியன் இருக்கிறது என்றால் சரிதான். தெற்கிலிருந்து வடக்கே வரும் ரோடு குறுகிய சின்ன ரோடு என்றால் சரிதான். தெற்கிலிருந்து வடக்கே வந்து பிரதாண சாலைக்கு சேர்வதற்கு முன்பாக ஒரு ஸ்பீட் பிரேக் உள்ளது என்றால் சரிதான். டிப்பர் லாரி தெற்கிலிருந்து வடக்கே வந்து மேற்கு முகமாக திரும்பியது என்றால் சரிதான். தெற்கிலிருந்து வடக்கு நோக்கி வரும் சாலையில் நான் ஏஞ்சல் டீக்கடையில் கிழக்கு பக்கம் நின்றுகொண்டிருந்தேன். தெற்கிலிருந்து வடக்கே வந்த லாரி மேற்குமுகமாக திரும்பியபோது, யார்மேலே தவறு இருக்கிறது என்று எனக்கு தெரியாது. அதேபோல அந்த திசையில் என்ன நடக்கிறது என்று எனக்கு தெரியாது என்றால் சரிதான். நான் சத்தம் கேட்டுதான் சென்று பார்த்தேன். அப்போது லாரியின் ஓட்டுநர் அங்கே இருந்தார் என்றால் சரிதான். விபத்து நடந்தவுடன் சுமார் 50,60 நபர்கள் சம்பவ இடத்தில் கூடிவிட்டார்கள் என்றால் சரிதான். ஆம்புலன்சை யார் வரச்சொன்னார்கள் என்று எனக்கு தெரியாது. ஆம்புலன்சில் யார் உடன் சென்றது என்று எனக்கு தெரியாது. இந்த விபத்திற்கு யார்

**ஒம்./-எஸ்.பி.பரத் குமார்**
**நீதித்துறை நடுவர் எண்.1,**
**கரூர்.**

காரணம் என்று எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான். விபத்து சம்மந்தமாக போலிசார் என்னை விசாரிக்கவில்லை. இறந்துபோனவர் எனது தெருவை சேர்ந்தவர் என்பதால் அவருக்கு இழப்பீடு பெற வேண்டும் என்பதற்காக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எனது முதல் விசாரணை ஏற்றுக்கொள்ளத்தக்கதல்ல என்றால் சரியல்ல. சம்பவ சமயத்தில் நான் சம்பவ இடத்தில் இல்லை என்றால் சரியல்ல.

என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு சரியென ஒப்புக் கொண்டு என் முன் கையெழுத்து செய்தார்.

**ஒம்./-எஸ்.பி.பரத் குமார்**
**நீதித்துறை நடுவர் எண்.1,**
**கரூர்.**